**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**119/2019

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் : 14.10.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காரல்மார்க்ஸ் | ஜாதி | : | |
| த/பெயர், | : | துரைக்கண்ணு | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கை நான் தெருவாசிகளின் பிரதிநிதி என்பதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிநிதியாக இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிநிதித்துவத்தில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாக எனது வழக்குரையில் எந்த சங்கதிகளும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தின் அனுமதி பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு பிழையுடையது என்று சொன்னால் சரியல்ல.

2) கடந்த 03.09.2019–ல் அளக்க வந்தபோது பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக நகராட்சிக்கு எழுத்து மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னால் கொடுக்கப்பட்ட அறிவிப்பை நகராட்சியில் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். வாங்க மறுத்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நான் சொல்வதுபோல் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் தான் என்னால் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும், புகார் கொடுத்ததாக பொய்யான சங்கதிகளை கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் கண்டுள்ள செல்வாநந்தன் நகர் முறையாக அங்கீகரிக்கப்பட்டது என்றால் சரிதான். முறையாக அங்கீகரிக்கப்பட்ட நகர் என்பதால் அதிலுள்ள ரோடு, பூங்கா போன்றவை நகராட்சிக்கு உட்பட்டது என்றால் சரிதான். 1ம்

பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.17 14:36:28 +0530

District Munsif
Mannargudi.